**செய்தி வெளியீடு எண் : 1790** **நாள் : 12.10.2022**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் மறுசீரமைக்கப்பட்டு அதன் முதற்கூட்டம் 10.10.2022 அன்று சென்னை, காமராஜர் சாலையில் உள்ள மாற்றுத்திறனாளிகள் நல ஆணையத்தில், மாண்புமிகு சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைகள் துறை அமைச்சர் திருமதி பி. கீதாஜீவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் உதவிகளை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டங்களை மேம்படுத்தவும், மாற்றுத்திறனாளிகள் உரிமைகளை பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகள் குறித்து விவாதம் நடைபெற்றது. வாரிய உறுப்பினர்களின் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் அரசு செயலாளர், நிதித் துறையின் அரசு சிறப்பு செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், இணைச் செயலாளர் நிதித் துறை, ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in